தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006
ந.க.எண் 82469/சி2/இ1/2010 நாள் 09.01.2013

பொருள் தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – புதிய நியமனங்கள் – ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2009–2010ம் ஆண்டில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் அரசு உயர்நிலை /மேல்நிலைப்பள்ளிகளுக்கு – பட்டதாரி ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டு – அறிவியல் பாட பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள் – முறையான நியமனமாக முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – சார்பு

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பதொ) செயல்முறைகள் ந.க.எண் 82469/சி2/இ1/2010 நாள் 3.9.2010, 7.9.2010, 20.9.2010, 22.09.2010, 27.09.2010, 4.10.2010, 23.11.2010, 11.1.2011

2009–2010ம் ஆண்டுகளில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு உயர்நிலை /மேல்நிலைப்பள்ளிகளுக்கு அறிவியல் பாட பட்டதாரி ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டு, பார்வையில் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகள் மூலம் வழங்கப்பட்ட நியமனங்கள் அனைத்தும் அவ்வாசிரியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் முறையான நியமனமாக முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆசிரியர்களுக்கு தனியாக பணிவரன்முறை செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கலாகிறது.

இச்செயல்முறைகள் நகல்கைள தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு அனுப்பிவைப்பதோடு, சார்ந்த ஆசிரியர்களின் பணிப்பதிவேடுகளில் உரிய பதிவுகளை பதிவு செய்யுமாறு, சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பதொ) செயல்முறைகள் ந.க.எண் 82469/சி2/இ1/2010 நாள் 3.09.2010ன்படி கடலூர் மாவட்டம், கழுதூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு அறிவியல் பாட பட்டதாரி ஆசிரியராக நியமனம் வழங்கப்பட்ட **திருமதி.கே.அழகேஸ்வரி,** (பாடம் – இயற்பியல், தர எண் 16, இனம்–SC-ICM )(Priority basis ) என்பார் கலப்பு திருமண முன்னுரிமை அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டவர் ஆவர். அன்னாரின் நியமனம் குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் அவரால் தொடரப்பட்ட வழக்கு (வழக்கு எண் 10672/2011 மற்றும் எம்பி.எண் 2/2011) **நிலுவையில் உள்ளதால் இவ்வாசிரியரைத் தவிர** ஏனைய ஆசிரியர்களுக்கு மேற்காண் ஆணையின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்.) ச.கண்ணப்பன்,
பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

பெறுநர்
அனைத்துமுதன்மைக்கல்வி அலுவலர்கள்.